நிலை பதவிக்கான சம்பளத்தைப் பெறத் தகுதியுள்ளவர்களாக உள்ளனர்?

(இ) அவர்களுக்கு அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ள முதல் நிலை சம்பளம் அவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) நான்கு

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Administrative Staff College, Hyderabad

* 243 *Q*.—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru **V. ISVARMURTI**): Will the **Hon. the Minister for Education and Local** Administration be pleased to state—

(*a*) whether the Administrative Staff College, Hyderabad has submitted any report about the management of the Directorate of Education in this State in 1972; and

(*b*) if so, whether a copy of the report will be pleased on the **table of the House?**

ஹைதராபாத் நிர்வாகப் பணியாளர் கல்லூரி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹைதராபாத், நிர்வாகப் பணியாளர் கல்லூரி இம் மாநிலத்தில் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் நிர்வாகம் பற்றி அறிக்கை எதனையும் 1972-ல் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அந்த அறிக்கையின் படி ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இவ்வறிக்கை மாநில அரசின் திட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மந்தன அறிக்கை ஆகும். திட்டக் குழுவைச் சார்ந்த கல்விப் பணிக் குழுவே அவ்வறிக்கையை நிராகரித்துவிட்டது. எனவே அவ் வறிக்கையை அரசு மட்டத்தில் மேலும் கருதிப் பார்க்கும் நிலை எழாது.

1972 ஆகஸ்ட் 24]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இது இரகசியமான அறிக்கையாக இருக்கும்போது, அதில் ஒரு பகுதி எப்படி செய்தித் தாள்களில் வந்தது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த அட்மினிஸ்டிரேடிவ் ஸ்டாஃப் காலேஜில் இருப்பவர்களை நமது அரசாங்கம் அழைத்து இம்மாதிரி ஏதேனும் ஆய்வு செய்யும்படி வேண்டிக் கொண்டதா? வசதிகள் செய்து கொடுத்தனரா? அந்தக் குழுவினர் மாநிலம் முழுவதும் சுற்றிய பிறகு, இந்த முடிவுக்கு வந்தார்களா? அதற்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப் பட்டன? ஏன் ஒருமுகமாக இந்த மாதிரி அறிக்கை வெளியிடப் பட்டது? "கான்பிடென்ஷியல்" அறிக்கையில் ஒரு பகுதி—இதுவும் விரும்பத் தகாத பகுதி—மாத்திரம் செய்தித் தாள்களில் வந்த மர்மம் என்ன என்று அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதில் மாநில அரசால் அமைக்கப்பட்ட திட்டக் குழுவால் கல்விக்காக தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் Task Force என்று தனிக் குழு அமைத்திருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு ஐதராபாத்தைச் சேர்ந்த இந்த நிறுவனத்தைச் சேர்ந்த வர்களைக் கொண்டு ஆராயும்படி செய்யப்பட்டது. அது அவர் களுக்கு அளிக்கப்பட்ட ரகசிய அறிக்கையாகும். அந்தக் குழுவினரே அந்த அறிக்கையை மேலும் ஆராய்ந்து தள்ளிவிட்டார்கள். ஆகவே நம் அரசாங்கத்திற்கு அது அனுப்பி வைக்கப்படவில்லை. இங்கிருந்து எப்படிப் போயிற்று என்று கேட்டபோது, இங்கிருந்து போகவில்லை என்று பதில் தெரிவித்தார்கள். உருவாக்கியவர்கள் தந்தார்களா அல்லது ஐதராபாத்திலிருந்து வெளியிடப்பட்டதா என்ற விவரம் தெரியவில்லை.

THIRU G. SWAMINATHAN : What are the qualifications of the members of the team from Hyderabad Staff College to go into the affairs of the Educational department of our State? Are they qualified for such a scrutiny to go into the affairs? That is what I want to know, Sir.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆய்வு போன்ற மானேஜ் மெண்ட் விவகாரங்களில் ஐதராபாத் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருப்பவர்கள் நன்கறிந்தவர்களாக இருப்பார்கள் என்று கருதி, அவர்களிடத்தில் இந்த "டாஸ்க்" குழு ஒப்படைத்தார்கள். அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார்கள். அதற்கு "இந்தியன்

கவுன்சில் ஆஃப் சோஷல் சயன்ஸ் ரிசர்ச்" என்டோமெண்ட் ரூ. 15,000 கொடுத்தார்கள்; மாநில அரசு ரூ. 5,000 தந்தது. அந்தக் குழு அறிக்கை தயாரித்தது. அது டாஸ்க் குழுவால் ஆராயப் பட்டு அவர்களே தள்ளிவிட்டார்கள். அந்த அளவிற்குத்தான் அவர்களிடத்திலிருந்து நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, inasmuch as these people in the Administrative Staff College have looked only at the dark side of the Report and maligned the Education Department and sapped the enthusiasm of all the people working in the Education Department, will the Government issue a statement categorically saying that the Report is not considered by the Government at all and that it has been rejected as of 'no consequence'?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த அறிக்கை கேட்ட குழுவினரே அதை ஆராய்ந்து பார்த்து அந்த அறிக்கையைத் தள்ளிவிட்டார்கள். முக்கியமாக அதில் குறைகள், "சஜெஷனுக்கு" பதிலாக "க்ரிடிசிஸம்", அதிகமாக இருந்த காரணத்தால், அதை ஏற்றுக்கொள்ளவில்லை. குறைத்துச் சொல்லப் பட்டது. அதில் ஒன்றிரண்டு சரியாக இருக்கலாம், ஒன்றிரண்டு தவறாக இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ளா விட்டால், ரூ. 90 கோடி பாழ் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எடுத்துக்காட்டு என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட "க்ரிடிசிஸம்" இருப்பதால், முழுவதையும் எடுத்து ஆராய்ந்து பார்த்து "டாஸ்க்" குழுவினரே அதைத் தள்ளிவிட்டார்கள். ஆனால் அதிலுள்ள சிறந்த கருத்துக்களை "டாஸ்க் ஃபோர்ஸ்" தாங்களாகவே ஆராய்ந்து, தங்களால் வைக்கப்படுகின்ற அறிக்கைக் குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர்கள் சொன்னார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஹைதராபாத் குழுவினுடைய சிபாரிசுகள் பத்திரிகையிலே வந்தபோது, கல்வித் துறையின் நிர்வாகப் போக்கைப் பற்றியும், காலம் கடத்துதல், சிகப்பு நாடா முறைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடுவ தாக இருக்கின்றன. அந்தச் சிபாரிசுகளைப் பொறுத்த அளவில், கல்வித் துறையிலே இருக்கக்கூடிய நடைமுறைகள், பல ஆண்டு களாகத் திருத்தப்படாத நிலையில் இருக்கின்றன. பைல்களைப்பற்றி யும் குறிப்பிட்டிருக்கிறது. அது நல்ல சிபாரிசு என்று கருதுகிறேன். அதை அமல் நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதனுடைய சிபாரிசுக்காக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதைத் தனியாகக்கூட ஆராயலாம், அப்படிப்பட்ட குறைபாடுகள் பல இருக்கின்றன. அதைத் தனியாக ஆராய்கின்ற முறையிலும், தனியாக எடுத்துச் சொல்லலாம். ஏனென்றால் அந்த அறிக்கையைத் தள்ளிவிட்ட பிறகு, அதனுடைய சிபாரிசு என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் களையப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

THIRU G. SWAMINATHAN: Sir, I wish to know this. It is said that it is the Administrative Staff College of Hyderabad. What is this Administrative Staff College of Hyderabad? Is it a Government organisation or a State Government Organisation or a Central Government Organisation or quasi-Government Organisation? Who were the people who gave this kind of information? information may be necessary to give credence to the authenticity What are their qualifications? Why were they selected? All this of that Report? Will they be furnished, Sir?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதை "குவாசி-கவர்ன்மெண்ட்" என்ற அளவிலே தான் கருதுகிறேன். ஏனென்றால் மத்திய அரசாங்கத்தினுடைய உதவி பெற்று கட்டிடங்கள் கட்டுவதிலே, தென்னக மாநிலங்களிலெல்லாம் பயன்படுத்துகிற காரணத்தால், இந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு, இந்த அரசாங்கமும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். "குவாசி கவர்ன்மெண்ட்" என்ற அளவுக்குத்தான் பணியாற்றி வருகிறது. நம்முடைய மாநிலத்திலிருந்து பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மேல் பயிற்சி தருவதற்காக அந்த நிறுவனத்திற்கு பலரை நாம் அனுப்பிவைக்கிறோம். பலரும் சென்று வருகிறார்கள். ஊராட்சி ஒன்றியத் துறை, வேறு பல நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்களும் சென்றுவிட்டு வருகிறார்கள். மற்றவர்களைவிட அதிகக் கவனம் செலுத்தி, நிர்வாகச் சீர்திருத்தங்களிலே கவனம் செலுத்துகிறவர்கள் தங்களுடைய நேரத்தையும், நினைப்பையும் செலவழிக்கிறார்கள். ஆகவேதான் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது சரியாக இருக்குமென்று "டாஸ்க் போர்ஸ்" கருதிற்று.

(Thiru M. Rajah Iyer rose)

MR. CHAIRMAN : Is the hon. Member repeating the same doubt? Supplementaries should be short.

THIRU M. RAJAH IYER : May I know the names of the persons who came down here and whether there is a background of their having served in this State and having a grouse against the Department, Sir?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

Seminar on Re-organisation of Rural Development Administration

*244 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Seminar was conducted at Kodaikanal on the re-organisation of rural development administration;

(b) if so, the persons who participated in that Seminar; and

(c) the steps taken thereon by the Government?

ஊராட்சி வளர்ச்சி நிர்வாக சீரமைப்பு கருத்தரங்கு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி வளர்ச்சி நிர்வாக சீரமைப்பு சம்பந்தமாக கொடைக்கானலில் கருத்தரங்கு நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் கலந்து கொண்டனர்?

(உ) அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அக் கருத்தரங்கில் கலந்து கொண்டோர் பட்டியல் @ பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

(உ) அங்கு எடுக்கப்பட்ட பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, அவர்கள் அரசுக்கு என்னென்ன சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை அவைக்கு அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 225–227-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.